





## சொத்துரிமை நிர்வாகம் என்றால் என்ன?

உங்களின் உற்றார் தூக்கத்திலோ, தாக்கத்தாலோ, விபத்தாலோ இறக்க நேரிட்டு, உரிய உயில் இல்லை என்பதை அறிந்தால், அவருடைய சொத்தினை அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும், என்பதை நீங்கள் அறிவீர்களா?

உங்களின் உற்றார் தீ, வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம் போன்ற ஏதாவதொன்றில் இறக்க நேரிட்டு, உரிய உயில் இருப்பதை அறிகிறீர்கள். அந்நிலையில் நீங்கள் நிறைவேற்றுநராக நியமிக்கப்பட்டால், அவருடைய சொத்துகளை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

**"இறப்பு நேரிடும்போதெல்லாம், இவை போன்ற சிக்கல்களை பெரும்பாலோர் எதிர்நோக்குகின்றனர்."**

உங்களின் உற்றார் காலமாகிவிட்டால், சட்டரீதிகளும் சிக்கல்களும் நம் சிந்தனைக்கு அப்பால் இருந்தாலும், அவை தவிர்க்க முடியாதவை. இன்னல்களையும் இடர்பாடுகளையும், பின்னர் எதிர்நோக்காமல் இருக்க, காப்புறுதி நிறுவனம், தொழிலாளர் சேமநிதி முதலியவற்றிற்குத் தெரிவிப்பதிலும் இறந்தவரின் சொத்துரிமையை நிர்வகிக்கும் பொறுப்பினை எடுத்துக்கொள்வதற்கும், நீங்கள் உடனடியாக செயல்படவேண்டும்.

இறந்தவரின் சொத்துகளைப் பொறுப்பு எடுப்பதற்கும், கடன்களைக் கட்டுவதற்கும், நீதிமன்றத்தில் மனுதாக்குதல் செய்வதற்கும், வழக்கறிஞர்கள், வங்கிகள், கடன்காரர்கள், வருமானவரித்துறை அலுவலகம் முதலியவற்றுடன் தொடர்பு கொள்வதற்கும், இவற்றையெல்லாம் செய்வதற்கும் நீங்கள் சரியான மனநிலையில் இருப்பீர்களா அல்லது உங்களுக்காக இவற்றைச் செய்வதற்குச் சொத்துரிமை நிர்வாக நிபுணர்களை நாடுவீர்களா?

## சொத்துரிமை நிர்வாகத்தின் படிமுறைகள் எவை?

ஒருவர் இறந்தபின்னர், ஆயுள் காப்புறுதி, தொழிலாளர் சேமநிதி அல்லது இணை/இருப்பவரின் கணக்கு போன்ற சில சொத்துகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாரிசுதாரரைச் சேரும். ஆனால், பெரும்பாலான பிற சொத்துகள் நீதிமன்ற ஆணைவழியாக மட்டுமே மாற்றமுடியும்.

தங்கள் சொத்துகளைப் பிறர் நிர்வகிக்கட்டும் என விட்டுவிட்டு அதிகமானோர் இறக்கின்றனர்.

சொத்துரிமையை நிர்வாகத்தில், உயில் படியோ, உயில் இல்லாவிட்டால், 1952ஆம் ஆண்டு (Distribution Act) பங்கீட்டுச் சட்டப்படியாகவோ இறந்தவரின் சொத்துகள் சேர்க்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பங்கிடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**இதனை உங்களால் தனித்து செய்ய முடியுமா? நிரந்தர அறங்காவலர்கள் (Perpetual Trustees) நியமிக்கப்பட்டால், அதன்பின்னர் நீங்கள்**

**தனித்து விடப்படமாட்டீர்கள்**

## உங்கள் எதிர்காலத்தை உறுதிசெய்யுங்கள்

பொறுப்பு மிகுந்த சிக்கலான உங்களுடைய சொத்துரிமையை நிர்வகிப்பதில் உங்களுடைய ஆசைகளை நிறைவேற்றவும் உங்கள் குடும்பத்தார், உறவினரின் சுமைகளைக் குறைக்கவும் உறுதிசெய்வது எங்கள் கடமையாகும்.

"பெர்பெச்சுவல் ட்ரஸ்ட்டீஸ் பெர்ஹாட்"ஐ (உயில் இருந்தால்) உங்கள் நிறைவேற்றுனராக, அல்லது (உயில் இல்லாவிட்டால்) உங்கள் நிர்வாகியாக நியமித்தால், உங்களுடைய நெருங்கியவர்களின் பெரும் பொறுப்பினைப் பின்வரும் சொத்துரிமை நிர்வாகத்திலிருந்து விடுவிப்போம்.

- ☑ சொத்துரிமையின் இருப்புகள், கடன்கள், வாரிசுதாரர்கள் ஆகியவற்றைக் கண்டறிதல்
- ☑ இறுதி சாசனப் பத்திர நிர்வாகத்திற்கான ஒப்புதல்கள் பெறுதல்
- ☑ வரி வரவுகளையும் கடன்களையும் சமாளித்தலும், உள்ளூர், வெளியூர் சொத்துகளை நிர்வகித்தலும்
- ☑ சொத்துரிமை கடன்களைக் கட்டுதலும், உங்கள் பெயரால் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைக்கு அறங்காவலராகச் செயல்படுதலும்.
- ☑ சொத்துகளை வாரிசுதாரர்களுக்குப் பங்கிடுதலும், தொடர்புடைய கணக்குகளைத் தயாரித்தலும் முழுமைபடுத்துதலும்.
- ☑ தனியார் நிறைவேற்றுனர்கள் போல் அல்லாது, 'பெர்பெச்சுவல் ட்ரஸ்ட்டீஸ்' இடம் நீங்கள் இழப்பீடு வழங்கத் தேவியில்லை. அதனோடு, உங்கள் சொத்துரிமை நிர்வாகமும் தீர்வும் துரிதமாக நிறைவேறும்.
- ☑ முஸ்லீம்களின் சொத்துரிமை நிர்வாகம் பொறுத்தமட்டில் 'ஷரியா' சட்ட அடிப்படையில் 'பெர்பெச்சுவல் ட்ரஸ்ட்டீஸ்' நிர்வகிக்கும்

## பெர்பெச்சுவல் ட்ரஸ்ட்டீஸ் எதற்காக?

சொத்துரிமை நிர்வாகம் மிகுந்த சிக்கலான, நேரம் எடுக்கும் ஒரு பணியாகும். நீங்கள் உங்கள் உற்றார் இறப்பின், துக்கத்தில் உள்ளபோது எடுக்கவேண்டிய முக்கியமான, சிக்கலான, தொழில்நுட்பமான முடிவுகளிலிருந்து உங்களை விடுவிப்போம்.

உங்கள் உற்றார் இறப்பின், துக்கத்தில் இருக்கும் உங்கள் உணர்வுகளுக்கு நாங்கள் மிகுந்த மதிப்பளிப்போம். எளிமையானதானாலும் சரி, சிக்கலானதானாலும் சரி அனைத்து சொத்துரிமைகளையும் நிர்வகிப்பதில் நாங்கள் அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் ஆவர்.

*Perpetually Yours.*

**PERPETUAL TRUSTEES BERHAD**
*Yours TRUST WILL Begin With Us*

Unit C-13-02, 1st Floor, Dataran 3 Dua.
Jalan 19/1, 46300 Petaling Jaya. Selangor Malaysia
Tel 03-7956 6741 / 7741
Fax 03 7956 5741

# ESTATE ADMINISTRATION
# சொத்துரிமை நிர்வாகம்



**PERPETUAL TRUSTEES BERHAD**
*Yours TRUST WILL Begin With Us*